செ. கு. எண்: 107 நாள்: 26.04.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.4.2013

சேலம் மாவட்டம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு R. ராஜசேகர் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.4.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.C.குப்புசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் 17.4.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல் தொலைத் தொடர்பு பிரிவின் (Police Telecommunication Branch) தலைமை கட்டுப்பாட்டு அறையில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.ஜெயராமுலு அவர்கள் உடல் நலக் குறைவால் 21.4.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், ஆயுதப் படைப் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு P.சங்கர்பிரசாத் அவர்கள் 22.4.2013 அன்று அழகுகவுண்டன்வலசு அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. ஜெயராமுலு, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகர், முதல் நிலைக் காவலர் திரு.குப்புசாமி மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் திரு.சங்கர்பிரசாத் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக்குறைவால் காலமான காவல் துறை உதவி ஆய்வாளர் திரு.ஜெயராமுலு, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகர், முதல் நிலைக் காவலர் திரு.குப்புசாமி மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்த இரண்டாம் நிலைக் காவலர் திரு. சங்கர்பிரசாத் ஆகியோர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**